**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.எம்.முத்துக்கருப்பன்.,**

**ந.க.எண்.4363/2019/கெ4** **நாள்.11.02.2020.**

பொருள் : பணியமைப்பு – கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுக்கு 10% இட ஒதுக்கீட்டில் அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராக பணி மாறுதலின் மூலம் பதவி உயர்வு வழங்கி உத்தரவிடப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

1. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2936/2017/கெ4 நாள்:21.08.2018
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3659/2018/கெ4 நாள்:08.03.2019
3. சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள்.

-------

**உத்தரவு :**

கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுக்கு 10% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராகப் பணி மாறுதலின் மூலம் பதவி உயர்வு வழங்கி பார்வை (1) மற்றும் (2)ல் காண் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின் படி உத்தரவிடப்பட்ட கீழ்க்காண் பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் நிலையில் கலம் எண்.5ல் குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சி.சாந்தி<br>ஊர்நல அலுவலர்நிலை–II | வட்டார வளர்ச்சி அலுவலகம், பொள்ளாச்சி (தெற்கு) | 21.08.2018 பி.ப | 21.08.2018 பி.ப |
| 2. | ர.சசிகலா<br>காசாளர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், மதுக்கரை | 08.03.2019 மு.ப | 08.03.2019 மு.ப |

மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட தலைமை அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(வளர்ச்சி),
கோயம்புத்தூர்.

11-02-2020

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் – (உரிய வழியாக).

நகல் :
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), பொள்ளாச்சி(வடக்கு) மற்றும் மதுக்கரை வட்டாரங்கள்
2. கெ4 இருப்பு கோப்பிற்கு.